# News Release

# பட்ஜெட் 2025: உங்களுக்காக வலுவான தலைமையை வழங்குகிறோம்

*வாகன் நகரவை நகரத்தின் 2025 பட்கெட் மற்றும் 2026க்கான நிதித் திட்டத்தை அங்கீகரிக்கிறது*

**வாகன், ஒன் (டிச. 17, 2024) -** அனைவருக்காகவும் செயல்படும் ஒரு நகரத்தைக் கட்டியெழுப்புவதிலும் அது *உங்களுக்கான வலுவான தலைமையை வழங்குவதன்* வழிகாட்டுதலில் நடைபெறுவதிலும் வாகன் நகரத்தின் 2025 பட்கெட் மற்றும் 2026 நிதித் திட்டம் (PDF) கவனம் செலுத்துகின்றது. இன்று மாலை நடைபெற்ற சிறப்பு நகரவை (பட்ஜெட்) கூட்டத்தில் வாகன் நகரவையால் இது அங்கீகரிக்கப்பட்டது.

மேயர் ஸ்டீவன் டெல் டூக்கா முன்வைத்துள்ள இந்த பட்ஜெட் வரிசெலுத்துவோருக்கான ஒரு சமச்சீரான அணுகுமுறையை அளிக்கிறது. அதேசமயம் வாழ்க்கைச் செலவு, சமூகப் பாதுகாப்பு, போக்குவரத்து நெரிசலைச் சமாளித்தல் ஆகியவற்றை நிவர்த்திப்பதில் நகரவையின் கடின உழைப்பையும் எடுத்துக் காட்டுகிறது.

வாகனின் 2025 பட்ஜெட் குறித்து நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியவை அனைத்தும் இதோ:

**சொத்து வரி ஆதரவுடன் செயல்பாட்டு பட்ஜெட்**
2025க்கான சொத்து வரி ஆதரவிலான மொத்தச் செயல்பாட்டு பட்ஜெட் $441.9 மில்லியன். **இதில் மூன்று சதவீத சொத்து வரி அதிகரிப்பும் அடங்கும். இதனுடன், யார்க் பிராந்தியத்திலேயே மிகக் குறைவான வரி வீதங்கள் கொண்ட நகரங்களுள் ஒன்றாக வாகன் தொடர்ந்து இருக்கிறது. மாபெரும் டொரண்டோ பகுதியில் மிகக் குறைந்த வரி வீதங்கள் கொண்டவற்றிலும் ஒன்றாக உள்ளது.** கழிவு சேகரிப்பு, பனி அகற்றல் மற்றும் நெருப்புத் தடுப்பு, கல்வி உட்பட குடும்பங்கள் சார்ந்திருக்கக்கூடிய பல திட்டங்கள் மற்றும் சேவைகளுக்கு நகரத்தின் செயல்பாட்டு பட்ஜெட் நிதியளிக்கிறது. இவற்றையும் வேறு பல சேவைகளையும் வழங்குவதற்காக ஒவ்வொரு சொத்துவரி டாலரிலும் இருபத்தெட்டு சென்டுகள் நகரத்தின் வசம் இருக்கும். எஞ்சியவை யார்க் பிராந்தியத்துக்கும் (51 சென்டுகள்) உளூர் பள்ளி வாரியங்களுக்கும் (21 சென்டுகள்) எனப் பிரிக்கப்படும். **மூன்று சதவீத அதிகரிப்பின்படி சராசரி சொத்துவரியில் மாதத்துக்கு $4.73 கூடுதலாக வரும்.**

**குடிநீர், கழிவுநீர், வெள்ளநீர் பட்ஜெட்**

இந்த நகரம் பாதுகாப்பான குடிநீர் வழங்கவும், திறம்பட கழிவுநீரைச் சேகரிக்கவும், வெள்ளத்தைத் தணிப்பதற்கு வெள்ளநீரை நிர்வகிப்பதையும் உறுதிசெய்ய திட்டங்களுக்கும் சேவைகளுக்கும் குடிநீர், கழிவுநீர், வெள்ளநீர் பட்ஜெட் நிதியளிக்கிறது. **ஒருங்கிணைந்த 2025 வீத அதிகரிப்பின்படி ஒரு வீட்டுக்கு ஒரு மாதத்துக்கான சராசரி குடிநீர் மற்றும் கழிவுநீர் பில்லில் கூடுதலாக $3.44 வரும்.**

**மூலதன பட்ஜெட்**

மூலதன பட்ஜெட்டில் 2025க்கான செயல்திட்டங்களும் 2026 வரையிலான கணிக்கப்பட்ட நிதித்திட்டமும்கூட முன்வைக்கப்படுகின்றது. 2025க்கான மூலதன பட்ஜெட் $424.7 மில்லியன் ஆக உள்ளது. 2026க்கான கணிக்கப்பட்ட மூலதனத் திட்டம் $249.5 மில்லியன். இந்த முதலீடுகள் நகரத்தின் நீடித்த வளர்ச்சிக்கு உதவும். நிதியானது சாலைகள், குழாய்கள் மற்றும் கட்டிடங்கள் உட்பட நகர உட்கட்டமைப்பை உருவாக்குவதிலும் பழுதுபார்ப்பதிலும் செலவிடப்படும்.

2025 பட்ஜெட் மற்றும் 2026 நிதித் திட்டத்தில் அடங்குபவை:

- **$327.4 மில்லியன் போக்குவரத்து மற்றும் நகர்திறன் மூலதன செயல்திட்டங்களில்** செலவிடப்படும். இது வாகனின் சாலை வலைத்தொடர்பு மற்றும் உட்கட்டமைப்பின் நம்பகத்தன்மை மற்றும் பாதுகாப்பை மேம்படுத்தும்.
- சமூக நலனைப் போஷிக்கும் நல்ல திட்டமிடல் மற்றும் நகர வடிவமைப்புக் கொள்கைகள் அடிப்படையில் உலகத்தரம் வாய்ந்த நகரத்தைக் கட்டமைக்க **$243.6 மில்லியன் நகரக் கட்டமைப்பு மூலதனச் செயல்திட்டங்களுக்குச்** செலவிடப்படும்.
- **$39.9 மில்லியன் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கான மூலதனச் செயல்திட்டங்களில்** செலவிடப்படும். இது சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் சமூக மற்றும் பொருளாதார முன்முயற்சிகள் வாயிலாக நீடித்த எதிர்காலத்தைப் பரிபாலிக்கவும் செய்யும்.
- **$27.9 மில்லியன் சிறந்த சேவைக்கும் பொறுப்புக் கூறலுக்கும் மூலதனச் செயல்திட்டங்களுக்குச்** செலவிடப்படும். இது தொடர் மேம்பாடு, புத்தாக்கம், வெளிப்படையான பொறுப்புக்கூறத்தக்க முடிவெடுத்தல், பொறுப்பான நிதி மேலாண்மை, திறமையான நிர்வாகம் மற்றும் தகவல் தொடர்பு மூலம் நிகரற்ற குடியிருப்போருக்கான சேவைகளை வழங்கச் செய்கிறது.
- **$19.8 மில்லியன் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு மூலதனச் செயல்திட்டங்களுக்குச்** செலவிடப்படும். இது பாதுகாப்பான ஆரோக்கியமான சமூகங்கள் வாயிலாக வாகனில் உயர்தர வாழ்க்கையைப் பேண வழிவகுக்கும்.

- **$15.3 மில்லியன் செயலூக்கமுள்ள ஈடுபடுத்தக்கூடிய உள்ளடக்கிய சமூக மூலதனச் செயல்திட்டங்களுக்குச்** செலவிடப்படும். இது வாகனின் அனைவருக்குமான துடிப்பான பன்முக உள்ளடக்கிய சமத்துவ அடிப்படையிலான சமூகத்தை உறுதிப்படுத்தும்.
- $0.3 மில்லியன் பொருளாதாரச் செழிப்பு மற்றும் பணி உருவாக்கத்துக்குச் செலவிடப்படும். இது தொழில்முனைவு நகரமான வாகனின் பொருளாதாரச் செழிப்பையும் முன்னேற்றத்தையும் முடுக்கிவிடும்.

இந்த நகரத்தின் 2025 பட்ஜெட் மற்றும் 2026 நிதித் திட்டம் (PDF) வாசித்து மேலும் அறிந்துகொள்ளுங்கள் அல்லது vaughan.ca/**budget** வருகை தாருங்கள்.

**மேற்கோள்**

”வாகனுக்கு மிக முக்கியமானவற்றில் - வாழ்க்கையை மேலும் இயலக்கூடியதாக, நம் குடியிருப்போரின் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து நெரிசலைச் சமாளித்தல் - கவனம் செலுத்தும் பட்ஜெட்டை வழங்குவதில் நான் பெருமை கொள்கிறேன். வாகன் நகரத்தின் 2025 பட்ஜெட் மற்றும் 2026 நிதித்திட்டம் நாளைக்கான வலுவான, பத்திரமான, மேலும் செழிப்பான வளர்ச்சியைக் கட்டமைக்கும் வேளையில் வாகனின் இன்றைய தேவைகளை பூர்த்திசெய்ய வடிவமைக்கப்பட்டுள்ளது. வரிகளைக் குறைவாக வைத்திருப்பதன் மூலம் அத்தியாவசியச் சேவைகளில் முதலீடு செய்வது, யார்க் பிராந்தியக் காவல்துறையை ஆதரிப்பது, நமது சாலைகளை மேம்படுத்துவது ஆகியவற்றினால் வலுவான தலைமை வாயிலாக நமது குடியிருப்போருக்கு அர்த்தமுள்ள முடிவுகளை அளிக்கிறோம். நாமனைவரும் ஒன்றிணைந்து குடியிருப்போரும் தொழில்களும் செழிக்கக்கூடிய வாகனை வடிவமைக்கவும் உங்களுக்கான தீர்வுகளை வழங்கவும் செய்கிறோம்.”

- மேயர் ஸ்டீவன் டெல் டூக்கா

**சுருக்கமான தகவல்கள்**

- வாகன் நகரத்தின் 2025 பட்ஜெட் மற்றும் 2026 நிதித்திட்டம் Dடிச. 17 சிறப்பு நகரவைக் (பட்ஜெட்) கூட்டத்தின்போது அங்கீகரிக்கப்பட்டது.
- நிதிகள் எவ்வாறு ஒதுக்கப்படுகின்றன என்பது குறித்து மேலும் அறிய வாகன் நகரத்தின் 2025 பட்ஜெட் மற்றும் 2026 நிதித்திட்டத்தைக் (PDF) காணுங்கள்.
- *வலுவான மேயர்கள், வீடுகட்டுதல் சட்டம், 2022*, அமலுக்கு வந்ததில் இருந்து இது ஒன்டோரியா அரசாங்கத்தின் மசோதா 3-இன் இரண்டாம் ஆண்டு. நகராட்சி பட்ஜெட்டை அங்கீகரிப்பதற்கு புதிய தேவைகளை இந்த மசோதா அறிமுகப்படுத்தியது.
- 2025 பட்ஜெட்டை விவாதிப்பதற்கான கூட்டங்கள் டிச. 4 புதன்கிழமை அன்று மாலை 7 மணிக்கும் டிச 17 செவ்வாய்க்கிழமை அன்று இரவு 8

மணிக்கும் வாகன் சிட்டி ஹாலில் உள்ள அவைக்களத்தில் பொதுமக்களும் கலந்துகொண்டு கருத்தைத் தெரிவிக்கும் தெரிவுகளுடன் நடைபெற்றது.

**மேலும் அறிய**

- வாகன் நகரத்தின் பட்ஜெட் இணையதளம்.
- வாகன் நகரத்தின் 2025 பட்ஜெட் மற்றும் 2026 நிதித் திட்டம் (PDF).

-30-

**வாகன் குறித்து:** வாகன் நகரம் 344,412க்கும் மேற்பட்ட மக்கள்தொகையுடன் கனடாவின் மிக வேகமாக வளர்ந்துவரும் நகரங்களுள் ஒன்று. 1991இல் தொடங்கப்பட்ட வாகனில் கான்கார்டு, கிளெய்ன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில், வுட்பிரிட்ஜ் போன்ற சமூகங்கள் அடங்கும். கலாச்சார பன்முகத்தன்மை கொண்ட நகராட்சியானது யார்க் பிராந்தியம் மற்றும் டொரண்டோ பெரும்பாகப் பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

**ஊடகத் தொடர்பு:** ஸ்டெஃபானியா ரெடிகோண்டா, அசோசியேட், ஊடகம் மற்றும் வெளியுறவுத் தொடர்புகள்
Communications, Marketing and Engagement Department
தொ. 905-832-2281, ext. 8496 மி. stefania.redigonda@vaughan.ca